

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 162 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 09 – செவ்வாய்க்கிழமை 23 ஜனவரி 2024 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 162 : Thiruvalluvar Year - 2055 - Thai 09 - Tuesday 23 January 2024 - Trichy ★ ★ 12 Pages ₹ 5.00





## சேலத்தில் சூளுரைப்போம்! சேர்ந்து எழுவோம்!

# ‘இந்தியா’ கூட்டணி வெல்லட்டும்!

## இலட்சோப லட்சம் பேர் திரண்ட தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை !

**சேலம், ஜன. 23 -**

**சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் லட்சோப லட்சம் பேர் திரண்ட தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில எழுச்சி மாநாட்டில் உரையாற்றிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலத்தில் சூளுரைப்போம்! சேர்ந்து எழுவோம்! ‘இந்தியா’ கூட்டணி வெல்லட்டும்” எனச் சூளுரை மேற்கொண்டார்.**

கழகத் தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (21.1.2024) சேலம் - பெத்த நாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி 2ஆவது மாநில மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு :-

கடல்போல் திரண்டிருக்கும் திராவிடப் பட்டாளமே! கொள்கைப் பிடிப்பும், இலட்சிய தாகமும் கொண்ட இலட்சக்கணக்கான தம்பிமார்களான உங்களை வீரபாண்டியார் மாவட்டமான சேலம் மாவட்டத்தில் ஒருசேரப் பார்க்கிறபோது, எனக்கு பெரிய உற்சாகமும், மகிழ்ச்சியும் – ஏன்; புத்துணர்ச்சியும் பிறக்கிறது! தெற்கில் விடியல் பிறந்திருப்பதைப்போல விரைவில் இந்திய நாடு முழுவதும் விடியல் பிறக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், எனக்கு இருபது வயது குறைந்தது போன்று புது தெம்பு வருகிறது! இப்படிப்பட்ட எழுச்சி மிகு - ஏற்றமிகு இளைஞரணி இரண்டாவது மாநாட்டின் தலைவர் என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத்தின் ஆற்றல்மிகு அடலேறு தம்பி உதயநிதி அவர்களே! உரையாற்றி அமர்ந்திருக்கும், கழகத்தின் பொதுச்செயலாளர் ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்களே! கழகத்தின் பொருளாளர் அருமை நண்பர் டி.ஆர்.பாலு அவர்களே! இளைஞர்களுக்கு இணையாகப் பணியாற்றி, இளைஞர் அணி மாநாட்டை கம்பீரமாக ஒருங்கிணைத்து நடத்திக் கொண்டிருக்கும் கழகத்தின் முதன்மைச் செயலாளர் - ஆயிருர்ச் சகோதரர் கே.என்.நேரு அவர்களே! கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.ராசா - அந்தியூர் செல்வராஜ் அவர்களே! கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றியிருக்கும் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றத்தில் கர்ஜனை மொழியாகத் திகழும் - அன்புத் தங்கை கனிமொழி அவர்களே! காலை முதல் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி அமர்ந்துள்ள - கொள்கைப் பரப்புச் செயலாளர் - அருமைச் சகோதரர் திருச்சி சிவா உள்ளிட்ட கருத்துப் போராளிகளே!

ஆற்றல்மிகு ஒருங்கிணைந்த சேலம் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்களே! தலைமைக் கழக நிர்வாகிகளே! இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர்களே! மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களே! சமுதாயத்தின் ஈட்டி முனைகளாக இருக்கும் இளைஞர் அணித் தம்பிமார்களே! என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

### பேரறிஞர் அண்ணா பெருமைப்பட்டது போல் நானும் பெருமைப்படுகிறேன்!

திராவிட இயக்கம் தோன்றி நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது; நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிவிட்டன! 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று சென்னை இராபின்சன் பூங்காவில் திரண்டிருந்த அதே கொள்கை உறுதியையும், இலட்சிய வேட்கையையும் இன்றைக்கு இலட்சக்கணக்கான இளைஞர்களான உங்களிடம் பார்க்கிறபோது, இந்த இயக்கத்தின் தலைவராக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! “அஞ்சாநெஞ்சர்களை அருந்தம்பிகளாகப் பெறும் பேறு பெற்றேனே!” என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா பெருமைப்பட்டதுபோல நான் பெருமைப்படுகிறேன்.

இந்த உணர்வை – உற்சாகத்தை எழுச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கும், இளைஞரணிச் செயலாளர் – தம்பி உதயநிதி அவர்களைப் பாராட்டுகிறேன் – வாழ்த்துகிறேன்! “மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்” என்று அய்யன் வள்ளுவர் சொன்னது போல, அவரின் செயல்கள் கழகப் பணிகள் – மக்கள் தொண்டு அமைந்திருக்கிறது! கழகத்திற்கான பணி, மக்களுக்கான பணி இரண்டிலும் எனக்குத் துணையாக மட்டுமல்ல; தூணாக தம்பி உதயநிதி இருக்கிறார்! அந்த உழைப்பைப் பார்த்துதான் நானும், பொதுச் செயலாளரும், தலைமைக் கழக நிர்வாகிகளும் மகிழ்ச்சி அடைகிறோம்!

எனக்கு முப்பது வயது இருக்கும்போது தலைவர் கலைஞரும், இனமானப் பேராசிரியரும் இளைஞரணியை உருவாக்கினார்கள்! அவர்கள் எங்கள்மேல் வைத்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றியது போல, என்னுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து, வெற்றிக்கொடி கட்டும் கொள்கைப் படையாக இளைஞரணி செயல்பட்டு வருவதை, இந்த சேலம் மாநாடு, நாட்டுக்கே சொல்லிவிட்டது!

“எந்தக் கொம்பனாலும் கழகத்தை வீழ்த்த முடியாது” என்ற நம்பிக்கை ஊட்டும் மாநாடாக இந்த சேலம் இளைஞரணி மாநாடு அமைந்துவிட்டது! இவ்வாறு என்னை நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல வைத்த இளைஞரணிச் செயலாளர் மாநில துணைச் செயலாளர்கள் – மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் என்று ஒட்டுமொத்த இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளும் நன்றியும்!

### மாநாடு என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு!

அடுத்து முக்கியமாக, இந்த மாநாடு இவ்வளவு பிரமாண்டமாக நடைபெறக் காரணமானவர் – நம்முடைய முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு! ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், “மாநாடு என்றால் நேரு; நேரு என்றால் மாநாடு!” மாநாடு நடக்கும் இடத்தில் நேரு இருப்பார். நேரு இருக்கும் இடத்தில் மாநாடு நடக்கும்! ஒரு மாநாட்டை எப்படி நடத்த வேண்டும் என்று, எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறார். அப்படிப்பட்ட நேரு அவர்களுக்கும், அவரோடு தோளோடு தோள்நின்று பணியாற்றிய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகச் செயலாளர்களான ஆற்றல்மிகு ராஜேந்திரன், சிவலிங்கம், செல்வகணபதி ஆகியோருக்கும் சேலம் மாவட்டக் கழகங்களின் அனைத்து நிர்வாகிகளுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள் வாழ்த்துகள்!

## இளைஞர் அணி என் தாய் வீடு!

இளைஞரணி, என் தாய்வீடு! என்னை வளர்த்த என்னை உருவாக்கிய இடம்! நான் இன்று கோடிக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் தலைவராக கடமையாற்றி வருவதற்கும் தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மக்கள் தொண்டாற்றி வருவதற்கும் அடித்தளம் இட்டது இளைஞரணி! அதனால் எனக்கு எப்போதும் தனிப் பாசமும் உரிமையும் உண்டு.

### இளைஞரணிப் பொறுப்பேற்று - நான் தமிழ்நாட்டையே வலம் வந்தேன்!

1980ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் நாள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளைஞரணி தொடங்கப்பட்டது. அன்று முதல், நகரம் கிராமம் எங்கும் கழகக் கொடியை ஏற்றுவதும் பாசறைக் கூட்டங்கள் நடத்துவதும் என்று தமிழ்நாட்டையே நான் வலம் வந்தேன். மாநாடுகளில் நடத்தப்படும் பெரும் பேரணிகள் எல்லாம் எங்களின் வெண்சீருடை அணிவகுப்பால் பலரையும் அண்ணாந்து பார்க்க வைத்தது.


தொடர்ச்சி 2 ஆம் பக்கம்


## உதயநிதியைப் பாராட்டுகிறேன் - வாழ்த்துகிறேன்!



**இந்த உணர்வை - உற்சாகத்தை எழுச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கும், இளைஞரணிச் செயலாளர் - தம்பி உதயநிதி அவர்களைப் பாராட்டுகிறேன் - வாழ்த்துகிறேன்!**

**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்” என்று அய்யன் வள்ளுவர் சொன்னது போல, அவரின் செயல்கள் கழகப் பணிகள் - மக்கள் தொண்டு அமைந்திருக்கிறது! கழகத்திற்கான பணி, மக்களுக்கான பணி இரண்டிலும் எனக்குத் துணையாக மட்டுமல்ல; தூணாக தம்பி உதயநிதி இருக்கிறார்! அந்த உழைப்பைப் பார்த்துதான் நானும், பொதுச் செயலாளரும், தலைமைக் கழக நிர்வாகிகளும் மகிழ்ச்சி அடைகிறோம்!**

## எனக்குத் துணையாக மட்டுமல்ல; தூணாக உதயநிதி இருக்கிறார்!